**ஆகஸ்ட் – 06**

# TNPSC துளிகள்

- பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த கண்டுபிடிப்பாளரான பிரான்கி ஸபாடா என்பவர், பிரான்ஸ் மற்றும் இங்கிலாந்து ஆகிய நாடுகளுக்கிடையே உள்ள ஆங்கிலக் கால்வாயை ஜெட் ஆற்றலால் இயங்கும் ஹோவர் போர்டு கருவி மூலம் முதன்முறையாகக் கடந்துள்ளார்.
    - நான்கு டர்போ ஜெட் எஞ்சின்களால் இயக்கப்படும் ஃப்ளைபோர்டு ஏர் எனும் கருவியானது கணினியைப் பயன்படுத்தி கட்டுப்படுத்தப்படாத வகையில் நிலை நிறுத்தி அதனை காற்றில் பறக்க அனுமதிக்கிறது.

# தேசியச் செய்திகள்

## முத்தலாக் சட்ட வரலாறு


- 2017 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 22 அன்று இந்திய உச்ச நீதிமன்றமானது, உடனடி முத்தலாக் (தலாக்-இ-பிதாத்) முறையை அரசியலமைப்பிற்கு முரணானது எனக் கூறி ஒரு சட்டத்தை இயற்றுவதன் மூலம் இந்த நடைமுறையை தடை செய்யுமாறு அரசைக் கேட்டுக் கொண்டது.
- இதனால் இஸ்லாமிய பெண்கள் (திருமணம் தொடர்பான உரிமைகள் பாதுகாப்பு) அவசரச் சட்டமானது 2018 ஆம் ஆண்டு செப்டம்பர் 19 அன்று குடியரசுத் தலைவரால் பிரகடனப்படுத்தப்பட்டது.
- 2019 ஆண்டு ஜனவரி 22 ஆம் தேதியுடன் இந்த அவசரச் சட்டம் காலாவதியாக இருந்த நிலையில் இதனை சட்டமாக மாற்றுவதற்காக 2018 ஆம் ஆண்டு டிசம்பர் 17 ஆம் நாள் புதிய மசோதா ஒன்றை அரசு மக்களவையில் அறிமுகப்படுத்தியது.
- இருப்பினும் இந்த மசோதா மாநிலங்களவையால் நிறைவேற்றப்படவில்லை.
- மீண்டும் 2018 ஆம் ஆண்டின் அவசரச் சட்டம் காலாவதியாகும் முன்னரே அரசானது 2019 ஆம் ஆண்டு ஜனவரி 10 அன்று அதனை மறு பிரகடனம் செய்தது.
- 2019 ஆம் ஆண்டு ஜனவரி 12 அன்று குடியரசுத் தலைவர் 2019 ஆம் ஆண்டின் முத்தலாக் அவசரச் சட்டத்திற்கு மறு ஒப்புதல் அளித்தார்.
- இந்த முத்தலாக் அவசரச் சட்டமானது 2019 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 29 அன்று காலாவதியாவதாக இருந்தது.
- எனவே, இச்சட்டத்திற்கான மசோதாவானது ஜூன் 25 அன்று மக்களவையிலும் பின்னர் ஜூலை 30 அன்று மாநிலங்களவையிலும் நிறைவேறியது.
- 2019 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 01 அன்று குடியரசுத் தலைவர் இதற்கு ஒப்புதல் அளித்தார். இந்தச் சட்டமானது 2018 ஆம் ஆண்டு செப்டம்பர் 19 ஆம் நாளிலிருந்து நடைமுறைக்கு வந்தது.
- இந்த மசோதாவானது அரசியலமைப்பின் சரத்து 44-ன் (பொது சிவில் சட்டம்) கூறுகளுக்கு ஒத்ததாக உள்ளது.

## லடாக்கில் குங்குமப்பூ பரிசோதனை

- லடாக் விவசாயிகள் மற்றும் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கமானது ஜம்மு–

காஷ்மீரில் உள்ள லே பகுதியில் குங்குமப்பூ வளர்ப்பில் பரிசோதனை செய்யத் தொடங்கியுள்ளது.

- தற்போது, ஜம்மு காஷ்மீரின் புல்வாமா மற்றும் பாம்பூர் பகுதிகளில் குங்குமப்பூ வளர்க்கப்படுகின்றது.
- குங்குமப்பூ வளர்க்கப்படும் ஈரான் மற்றும் ஆப்கானிஸ்தானுடன் காலநிலைகளில் உள்ள ஒற்றுமையை லடாக் கொண்டுள்ளது.
- குங்குமப்பூவானது உலகின் விலையுயர்ந்த நறுமணப் பொருட்களில் ஒன்றாகும். மேலும் அதன் மருத்துவ, ஒப்பனை மற்றும் நறுமணப் பண்புகளால் இதற்கு அதிக தேவை உள்ளது.
- இது குரோகஸ் சாடிவஸ் எனும் தாவரவியல் பெயருடைய மிகச்சிறிய தாவரத்திலிருந்து வளர்கிறது.




**Stigmas and by-products or waste valorization of *Crocus sativus* L.**

# பொருளாதாரச் செய்திகள்

## ஊதியங்கள் மீதான சட்டம்

- 2019 ஆம் ஆண்டின் ஊதியங்கள் மீதான சட்டத்தை நாடாளுமன்றம் நிறைவேற்றியுள்ளது.
- இது எந்தவொரு தொழிலகம், வர்த்தகம், தொழில்கள் அல்லது உற்பத்தி மேற்கொள்ளப்படும் அனைத்துப் பணிகளிலும் ஊதியம் மற்றும் ஊக்கத் தொகை பண வழங்கீடுகளை ஒழுங்குபடுத்த முயல்கிறது.
- இந்தச் சட்டமானது அனைத்து ஊழியர்களுக்கும் பொருந்தும்.
- ரயில்வே, சுரங்கங்கள் மற்றும் எண்ணெய் வயல்கள் போன்ற பணிகளுக்கான ஊதியம் தொடர்பான முடிவுகளை மத்திய அரசு எடுக்கும்.
- மற்ற அனைத்துப் பணிகளுக்கும் மாநில அரசுகள் முடிவுகளை எடுக்கும்.
- இந்த சட்டமானது பின்வரும் 4 சட்டங்களை பதிலீடு செய்து மாற்றுகின்றது.
    - ஊதிய பண வழங்கீட்டுச் சட்டம் - 1936
    - குறைந்த பட்ச ஊதியச் சட்டம் - 1948
    - ஊக்கத் தொகை பணவழங்கீட்டுச் சட்டம் - 1965
    - சம ஊதியச் சட்டம் - 1976

***அடிப்படை ஊதியம்***


- தொழிலாளர்களின் வாழ்க்கைத் தரத்தின் அடிப்படையில் மத்திய அரசானது ஒரு அடிப்படை ஊதியத்தை நிர்ணயிக்கும்.
- மத்திய அரசு அல்லது மாநில அரசுகள் நிர்ணயிக்கும் குறைந்தபட்ச ஊதியமானது இந்த அடிப்படை ஊதியத்தை விட அதிகமாக இருத்தல் வேண்டும்.

***குறைந்தபட்ச ஊதியம்***

- முதலாளிகள் குறைந்தபட்ச ஊதியத்தை விட குறைவாக ஊதியம் வழங்குவதை இந்தச் சட்டம் தடை செய்கிறது.
- குறைந்தபட்ச ஊதியமானது மத்திய அல்லது மாநில அரசுகளால் பின்வருவனவற்றின் அடிப்படையில் நிர்ணயிக்கப்படும்.
    - தொழிலாளர்களின் திறன்
    - பணியின் கடினத் தன்மை

***கூடுதல் வேலை நேரம்***

- பணியாளர்கள் அவர்களின் நிர்ணயிக்கப்பட்ட பணி நேரத்தை விட அதிகமாக பணி புரிந்தால் அவர்களுக்கு கூடுதல் நேர ஊதியம் கிடைக்கும்.
- இந்த கூடுதல் நேர ஊதியமானது சாதாரண ஊதிய விகிதத்தை விட குறைந்தது இரு மடங்கு அதிகமாக இருத்தல் வேண்டும்.




***ஊக்கத் தொகை நிர்ணயம்***

- ஊக்கத் தொகையானது ஒரு பணியாளரின் ஊதியத்தில் குறைந்தபட்சம் 8.33% ஆக இருக்கும்.
- ஒரு பணியாளர் தனது வருடாந்திர ஊதியத்தில் 20% தொகையை அதிக பட்சமாக ஊக்கத் தொகையாகப் பெறலாம்.

***ஆலோசனைக் குழுக்கள்***

- பின்வரும் விவகாரங்கள் உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகள் குறித்து அந்தந்த அரசுகளுக்கு ஆலோசனை வழங்குவதற்காக மத்திய மற்றும் மாநில அரசுகளானது ஆலோசனைக் குழுக்களை அமைக்கும்.
    - குறைந்தபட்ச ஊதியங்களை நிர்ணயித்தல்
    - பெண்களுக்கு வேலைவாய்ப்புகளை அதிகரித்தல்

***பாலினப் பாகுபாடு***

- இது ஊதியம் மற்றும் ஒரே மாதிரியான வேலை அல்லது ஒரே வேலைகளுக்குப் பணியாளர்களை நியமிப்பது தொடர்பான விவகாரங்களில் பாலினப் பாகுபாட்டை தடை செய்கிறது.


***முதலாளிகளுக்கு அபராதம்***

- உரிய ஊதியத்தை விட குறைவாக வழங்குதல் அல்லது சட்டத்தின் எந்தவொரு விதிமுறைகளையும் மீறுதல் போன்ற முதலாளிகளால் செய்யப்படும் குற்றங்களுக்கான அபராதங்களை இந்தச் சட்டம் குறிப்பிட்டுள்ளது.
- இதற்கு அதிகபட்சமாக 3 மாத சிறைத் தண்டனையும் ஒரு லட்சம் ரூபாய் வரையிலான அபராதமும் விதிக்கப்படும்.

## PTA அமிலம் மீதான பொருள் குவிப்புக்கு எதிரான வரி

- தென் கொரியா மற்றும் தாய்லாந்திலிருந்து வரும் சுத்திகரிக்கப்பட்ட டெரெப்தாலிக் அமிலத்தின் அனைத்து இறக்குமதிகளுக்கும் இந்தியா பொருள் குவிப்புக்கு எதிரான வரியை விதித்துள்ளது.
- இந்த அமிலமானது துணிகள், பொதி கட்டுதல், அலங்காரப் பொருட்கள், நுகர்வோர் பொருட்கள், பிசின்கள் மற்றும் பூச்சுகளில் பயன்படுத்தப்படும் பாலிஸ்டர் சில்லுகளை தயாரிப்பதற்கான மூலப் பொருளாகும்.






# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச்செய்திகள்

## குங்குமத்திலிருந்து சூரிய மின்கலம்

- ஐதராபாத் ஐஐடியில் உள்ள ஆய்வாளர்கள் இந்தியாவில் உள்ள குங்குமம் தயாரிக்கப் பயன்படும் ஆயத்த ஆடைக்கான வண்ணச் சாயத்தைப் பயன்படுத்துவதன் மூலம் குறைந்த விலை மற்றும் சுற்றுச்சூழலுக்கு உகந்த சூரிய மின்கலன்களை உருவாக்கியுள்ளனர்.
- இந்த சாய - உணர் திறன் கொண்ட சூரிய மின் கலமானது நீர்கலந்த மின்பகு பொருள் மற்றும் பிளாட்டினம் அற்ற எதிர்மின் முனைகளுடன் கூடிய புதிய புசின் சாயத்தை அடிப்படையாகக் கொண்டது.
- தற்போதைய சிலிக்கான் அடிப்படையிலான சூரிய மின்கலன்களின் அதிக கட்டுருவாக்க செலவுகளானது அதிகளவிலான உற்பத்தி மற்றும் பரந்த பொதுப் பயன்பாட்டிற்கு ஒரு தடையாக உள்ளது.
- இந்தப் புதிய முறை மேற்கண்ட குறைகளை நிவர்த்தி செய்கின்றது.

# சுற்றுச்சூழல் செய்திகள்

## மேம்பட்ட காற்று மாசுபாட்டு கணிப்பான்கள்

- சீனா மற்றும் அமெரிக்காவைச் சேர்ந்த ஆய்வாளர்கள், ஒரு பருவத்திற்கு முன்பே


அந்தப் பிராந்தியத்தில் காற்று மாசுபாட்டின் அளவைத் துல்லியமாகக் கணிக்க உதவும் கணினி மாதிரியை உருவாக்கியுள்ளனர்.

- ❖ இந்தப் புள்ளி விவர மாதிரிகளானது பெருங்கடல்கள் தொடர்பான சில காலநிலை இயல்புகளைப் பயன்படுத்துகிறது.
- ❖ வட இந்தியாவின் மீது குளிர்காலத்தில் ஏற்படும் காற்று மாசுபாட்டை கட்டுப்படுத்தும் விளைவுகளை பெருங்கடல்கள் கொண்டுள்ளன.
- ❖ வட இந்தியாவில் குளிர்காலத்தில் ஏற்படும் தூசுப்படல மாசுபாட்டின் அளவானது கீழ்க்காணும் விளைவுகளின் கூட்டிணைவால் கட்டுபடுத்தப் படுகின்றது எனவும் ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளது.
    - ○ பசுபிக் பெருங்கடலில் ஏற்படும் காலநிலை சுழற்சி வானிலை முறைகளில் உலகளாவிய அளவில் தாக்கத்தை ஏற்படுத்தும் எல்-நினோ.
    - ○ தெற்கு அரைக் கோளத்தின் வளிமண்டல மாறுபாட்டில் குறைந்த அளவில் ஏற்படும் அண்டார்டிக் அலைவு.
- ❖ இந்தப் புதிய மாதிரியானது குளிர் காலத்தில் தூசுப்படல மாசு நிலைகளை முன்னறிவிக்கவும் அதன்படி மாசுக் கட்டுப்பாட்டுத் திட்டங்களை உருவாக்கவும் அரசுகளுக்கு உதவும்.

# மாநிலச் செய்திகள்

## கோசி – மீச்சி நதிகள் இணைப்புத் திட்டம்

- ❖ பீகார் மாநிலத்தின் கோசி மற்றும் மீச்சி நதிகளை ஒன்றோடொன்று இணைக்கும் 4900 கோடி ரூபாய் அளவிலான கோசி – மீச்சி நதிகள் இணைப்புத் திட்டத்திற்கு மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது..
- ❖ மத்தியப் பிரதேசத்தின் கென்-பெட்வா திட்டத்திற்குப் பிறகு அரசால் அங்கீகரிக்கப்படும் இரண்டாவது மிகப் பெரிய நதிகள் இணைப்புத் திட்டம் இதுவாகும்.




- ❖ இத்திட்டமானது பின்வரும் பயன்களை அளிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.
    - ○ வடக்குப் பீகாரை (குறிப்பாக சீமாஞ்சல் பகுதி) தொடர்ச்சியான வெள்ள அபாயத்திலிருந்து விடுவித்தல்
    - ○ அதனைச் சுற்றியுள்ள 2.14 லட்சம் ஹெக்டர் நிலங்களுக்கு நீர்ப் பாசனம்.

# விளையாட்டுச் செய்திகள்

## வினேஷ் போகாட் – மல்யுத்தப் போட்டி

- போலந்தின் தலைநகரான வார்சாவில் நடைபெற்ற போலந்து ஓபன் மல்யுத்தப் போட்டியில் இந்தியாவின் மல்யுத்த வீராங்கனையான வினேஷ் போகாட் பெண்களுக்கான 53 கிலோ பிரிவில் தங்கம் வென்றார்.
- இதன் இறுதிப் போட்டியில் இவர் போலந்தின் ரோக்சனாவைத் தோற்கடித்தார்.
- ஸ்பெயின் மற்றும் துருக்கி ஆகியப் போட்டிகளுக்குப் பிறகு பெண்களுக்கான 53 கிலோ பிரிவில் இவர் பெறும் தொடர்ச்சியான மூன்றாவது தங்கப்பதக்கம் இதுவாகும்.



# முக்கிய தினங்கள்

## உலக தாய்ப்பால் வாரம் – ஆகஸ்ட் 01 – 07

- உலக தாய்ப்பால் வாரமானது ஆண்டுதோறும் ஆகஸ்ட் 01 முதல் 07 வரை அனுசரிக்கப்படுகிறது.
- இது வாழ்வின் முதல் ஆறு மாதங்களுக்கு, மிகப்பெரிய அளவிலான ஆரோக்கிய நலன்களைக் கொண்டுள்ள தனித்துவமான தாய்ப்பால் ஊட்டுவதை ஊக்குவிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இது தாய்ப் பாலூட்டும் நடவடிக்கைக்கான உலகக் கூட்டிணைவு, உலக சுகாதார நிறுவனம் மற்றும் யுனிசெஃப் ஆகியோரால் இணைந்து ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.
- முதன்முதலில் 1992ல் அனுசரிக்கப்பட்ட இது தற்போது 100-க்கும் மேற்பட்ட நாடுகளில் அனுசரிக்கப்படுகின்றது.
- இந்த அனுசரிப்பின் போது, பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகத்தின் உணவு மற்றும் ஊட்டச்சத்து வாரியமானது, "பெற்றோரை மேம்படுத்துங்கள், தாய்ப்பால் கொடுங்கள்" எனும் கருத்துருவின் கீழ் பல நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.
- தாய்ப் பாலூட்டுதல் முக்கியமானது ஏனெனில்
  - இது ஆரம்பக் கால வயிற்றுப் போக்கு மற்றும் கடுமையான சுவாச நோய் தொற்றுகள் போன்ற நோய்களைத் தடுப்பதினால் குழந்தை இறப்புகளை குறைக்கின்றது.
  - இது தாய்மார்களுக்கு மார்பக புற்றுநோய், கருப்பைப் புற்றுநோய், இரண்டாம் வகை நீரிழிவு நோய் மற்றும் இதய நோய்கள் போன்றவை உருவாகும் ஆபத்தை

குறைக்கின்றது.


Ministry of Health & Family Welfare
Government of India
WORLD BREASTFEEDING WEEK
1st - 7th August
Benefits of Breastfeeding for the Mothers
Promotes post-partum weight loss
Helps the womb to contract & the placenta is expelled easily
Helpful in spacing births in early months
Lower risk of maternal cancers (ovarian and breast cancer)
Less post partum depression

★★★★★★★★★★